ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 8.5 – தந்தை காலில்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.5 – தந்தை காலில்

‡ தந்தை காலில் விலங்கற ⋆
வந்து தோன்றிய தோன்றல் பின் ⋆
தமியேன் தன் சிந்தை போயிற்றுத் ⋆
திருவருள் அவனிடைப் பெறும் அளவிருந்தேனை ⋆
அந்தி காவலன் அமுதுறு பசுங்கதிர் அவை சுட ⋆
அதனோடும் ⋆
மந்த மாருதம் வன முலை தடவந்து ⋆
வலி செய்வதொழியாதே ! ‖ **8.5.1** ‖

மாரி மாக் கடல் வளைவணற்கிளையவன் ⋆
வரை புரை திருமார்பில் ⋆
தாரின் ஆசையில் போயின நெஞ்சமும் ⋆
தாழ்ந்ததோர் துணை காணேன் ⋆
ஊரும் துஞ்சிற்றுலகமும் துயின்றது ⋆
ஒளியவன் விசும்பியங்கும் ⋆
தேரும் போயிற்றுத் திசைகளும் மறைந்தன ⋆
செய்வதொன்றறியேனே ! ‖ **8.5.2** ‖

ஆயன் மாயமே அன்றி மற்றென் கையில் ⋆
வளைகளும் இறை நில்லா ⋆
பேயின் ஆர் உயிர் உண்டிடும் பிள்ளை ⋆
நம் பெண் உயிர்க்கிரங்குமோ ⋆
தூய மா மதிக் கதிர் சுடத் துணை இல்லை ⋆

இணை முலை வேகின்றதால் ⋆
ஆயன் வேயினுக்கழிகின்றதுள்ளமும் ⋆
அஞ்சேல் என்பார் இலையே ! ‖ **8.5.3** ‖

கயம் கொள் புண் தலைக் களிறுந்து வெந்திறல் ⋆
கழல் மன்னர் பெரும் போரில் ⋆
மயங்க வெண் சங்கம் வாய் வைத்த மைந்தனும் ⋆
வந்திலன் மறி கடல் நீர் ⋆
தயங்கு வெண் திரைத் திவலை நுண் பனி எனும் ⋆
தழல் முகந்திள முலை மேல் ⋆
இயங்கு மாருதம் விலங்கில் என் ஆவியை ⋆
எனக்கெனப் பெறலாமே ! ‖ **8.5.4** ‖

ஏழு மா மரம் துளை படச் சிலை வளைத்து ⋆
இலங்கையை மலங்குவித்த ஆழியான் ⋆
நமக்கருளிய அருளொடும் ⋆
பகல் எல்லை கழிகின்றதால் ⋆
தோழி ! நாம் இதற்கென் செய்தும் ⋆
துணை இல்லை சுடர் படு முது நீரில் ⋆
ஆழ ஆழ்கின்ற ஆவியை ⋆
அடுவதோர் அந்தி வந்தடைகின்றதே ! ‖ **8.5.5** ‖

முரியும் வெண் திரை முது கயம் தீப்பட ⋆
முழங்கழல் எரி அம்பின் ⋆
வரி கொள் வெஞ்சிலை வளைவித்த ⋆
மைந்தனும் வந்திலன் என் செய்கேன் ⋆
எரியும் வெங்கதிர் துயின்றது ⋆
பாவியேன் இணை நெடுங்கண் துயிலா ⋆

கரிய நாழிகை ஊழியின் பெரியன ⋆
கழியும் ஆறறியேனே ! ॥ **8.5.6** ॥

கலங்க மாக்கடல் கடைந்தடைத்து ⋆
இலங்கையர் கோனது வரை ஆகம் மலங்க ⋆
வெஞ்சமத்தடு சரம் துரந்த ⋆
எம் அடிகளும் வாரானால் ⋆
இலங்கு வெங்கதிர் இள மதி அதனொடும் ⋆
விடை மணி அடும் ⋆
ஆயன் விலங்கல் வேயினதோசையும் ஆய் ⋆
இனி விளைவதொன்றறியேனே ! ॥ **8.5.7** ॥

முழுதிவ்வையகம் முறை கெட மறைதலும் ⋆
முனிவனும் முனிவெய்தி ⋆
மழுவினால் மன்னர் ஆர் உயிர் வவ்விய ⋆
மைந்தனும் வாரானால் ⋆
ஒழுகு நுண் பனிக்கொடுங்கிய பேடையை ⋆
அடங்க அஞ்சிறை கோலித் ⋆
தழுவு நள் இருள் தனிமையின் கடியதோர் ⋆
கொடு வினை அறியேனே ! ॥ **8.5.8** ॥

கனஞ்செய் மா மதிள் கணபுரத்தவனொடும் ⋆
கனவினில் அவன் தந்த ⋆
மனஞ்செய் இன்பம் வந்துள் புக வெள்கி ⋆
என் வளை நெக இருந்தேனை ⋆
சினஞ்செய் மால் விடைச் சிறு மணி ஓசை ⋆
என் சிந்தையைச் சிந்துவிக்கும் ⋆

அனந்தல் அன்றிலின் அரி குரல் ⋆
பாவியேன் ஆவியை அடுகின்றதே ! ॥ **8.5.9** ॥

‡ வார் கொள் மென் முலை மடந்தையர் ⋆
தடங்கடல் வண்ணனைத் தாள் நயந்து ⋆
ஆர்வத்தால் அவர் புலம்பிய புலம்பலை ⋆
அறிந்து முன் உரை செய்த ⋆
கார் கொள் பைம் பொழில் மங்கையர் காவலன் ⋆
கலிகன்றி ஒலி வல்லார் ⋆
ஏர் கொள் வைகுந்த மாநகர் புக்கு ⋆
இமையவரொடும் கூடுவரே ॥ **8.5.10** ॥

அடிவரவு — தந்தை மாரி ஆயன் கயம் ஏழு முரியும் கலங்க முழுது கனஞ்செய் வார்கொள் தொண்டீர்

தந்தை காலில் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்